ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நெஞ்சுவிடு தூது வழி அறியலாகும் சைவம் சார்ந்த பதிவுகள்

**ச. ஜெயஸ்ரீ & முனைவர் க.நாகேஸ்வரி,**
**தமிழ்த்துறை,**
**தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்,**

**ஆய்வுச்சுருக்கம்**

சிற்றிலக்கியங்களில் ஒன்று தூது . தூது அக்காலம்தொடங்கி இன்றைய காலம் வரையிலும் சமூக வாழ்வியலோடு வருகின்றது.

தூது இலக்கிய நூல்கள் பல அழகர் கிள்ளைவிடு தூது, தமிழ்விடு தூது, கண்ணாடி விடு தூது, புகையிலை விடு தூது, வண்டு விடு தூது, தென்றல் விடு தூது இதனைப் போன்று பலவும்உள்ளன.

இவற்றுள் இக்கட்டுரைக்காக சுப்ரமணிய தேசிகரின் நெஞ்சுவிடு தூதில் வரும் 63 நாயன்மார்களில் மூவரின் (பக்தி நிலையை) சைவம் சார்ந்த கருத்துகளைபதிவிடுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

இந்துசமயம் என்றாலே சைவ நெறி சிறப்புடையது . உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாக இருக்கும் சிவபெருமான் தன்னுடைய அடியவர்கள் தன் மேல் வைத்திருக்கும் அன்பை உலகறியச் செய்ய விரும்பிய ஈசனது திருவிளையாடலை இக்கட்டுரை சமர்ப்பிக்கின்றது.

ஈசனின் அடியவர்களாகிய இயற்பகையார் அரிவாட்ட நாயனார் , இளையான் குடி மாறநாயனார் என்ற அடியார்களை பற்றிய செய்திகளை இவ்வாய்வு கட்டுரை விளக்குகின்றது.

**முன்னுரை**

நெஞ்சு விடு தூது என்ற இந்த நூலானது இளம் பெண்ணொருத்தி இறைவன் உலா வருவதைக் கண்டு மனதை பறிகொடுத்து தனது அன்பினை (அ) காதலை இறைவனிடம் தூதாக செல்லுமாறு தனது நெஞ்சை தூது விடுவதே நெஞ்சுவிடு தூது ஆகும் . இந்நூலில் 63 நாயன்மார்களின் பக்திநெறி இடம் பெற்றுள்ளது . அத்தகைய பக்திநெறி இடம் பெற்றுள்ளது .அத்தகைய பக்திநெறியில் மூவரின் வரலாற்றினையும் அவர்களது வாழ்வியல் சமூகத்திற்கு கூறும் கருத்துக்களையும் இவ்வாய்வு கட்டுரையின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**சைவசமயம்**

சமயத்தை பற்றி கூறுகையில் தமிழண்ணல் இந்துசமயம் என்ற ஒன்று இல்லை என்றும் சமணம் , பௌத்தம், கிறித்தவம், இசுலாமியம் அல்லாதவற்றை குறிக்க இந்து சமயம் என்ற பெயர் தவறுதலாக குறிக்கப்பட்டு வழக்கிற்கு வந்துவிட்டது என்கிறார் . எனவே இந்து சமயம் என்று குறிக்காமல் சிவநெறி , சைவம், சிவனியம் என்றே தமிழர்கள் தங்கள் சமயத்தை குறிக்க வேண்டும் என்கிறார் .

இதிலிருந்து நாம் சைவமதம் என்பதே இந்துமதம் என்பதை உணரமுடியும்.

பண்டைய இலக்கியங்களில் சிவம் என்ற சொல்லானது . சிவன் என்ற சொற்பொருளினைக் குறிப்பதாகிய சிறப்பு சார்பு , மெய்ப்பொருள், செம்பொருள் போன்ற சொற்களை காணமுடிகிறது . இதனையே முழு முதற் கடவுளைச் "சிறந்தது"என்ற சொல்லால் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். (பொருள் -90)

இறைவன் மனிதனிடமிருந்து பொன்னையோ , பொருளையோ நாடவில்லை. மாறாக அவனுள் இருந்து தோன்றும் உண்மையான அன்பையே எதிர்பார்க்கிறான்.

உலகை முழுவதும் ஆளுகின்ற இறைவன் மனிதன் உள்ளத்திலே தோன்றும் அன்பினையே எதிர்நோக்கி அதையே தனக்குரிய கோயிலாக அடியார் ஒருவரின் உள்ளத்தையே தேர்ந்தெடுத்ததை நாம் அறிகிறோம். இவ்வாறுசைவசமயத்தின்அன்புசார்ந்த கருத்துகளே இங்கு விளக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் அடியார்கள் பலராயினும் அரிவாட்டாய நாயனார் , இயற்பகையார், இளையான் குடி , மாற நாயனாரின் அன்பு சார்ந்த நிகழ்வுகள் சைவ மதத்தோடு ஒன்றிணைவதை இக்கட்டுரை விளக்குகிறது.

**இயற்பகையாரின் அன்புநெறி**

பூம்புகார் எனும் பெரிய நகரத்தை அநபாய சோழன் குலத்தில் தோன்றிய மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான் . அவ்மன்னனின்

நிழலில் மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். அவ்வாறு வாழ்ந்தவர்களில் வணிக குலத்தை சேர்ந்தோர் பலர் இருந்தனர் . அவ்வணிகர் குலத்தில் சிவத்தொண்டர் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர் பற்றற்ற பரமஞானி , தனது என்று உலகிலுள்ளோர் பற்று கொள்ளும் பாச உணர்ச்சிகளுக்கு இவ்வடியார் பகையாக இருந்தார் அதனால் இவரை இயற்பகையார் என்று அனைவரும் அழைக்கலாயினர். இயற்பகையார் இறைவனிடம் ஈடில்லா பக்தி கொண்டிருந்தார். இயற்கையாரும், அவர் தம் மனைவியாரும் இல்லறம் எனும் நல்லறத்தை இனிது நடத்தி வந்தனர் . அடியாரைப் பேணுவதையே தலைசிறந்த அறமாகக் கருதி இயற்பகையார் சீரோடும், சிறப்போடும் வாழ்ந்து வந்தார் . தெய்வம் தொழாது கொழுநனையே தொழுதெழுவாள் என்ற குறளுக்கேற்ப வாழ்ந்து வந்த அவரது மனைவியும், இயற்கையோடு சேர்ந்து கொண்டு திருநீரணிந்த மெய்யுடை அன்பர்களுக்கு பாதபூசை செய்யத் தவறுவதே இல்லை.

மகாதேவனாகிய சிவபெருமான் இவர்களின் பெருமையை உலகிற்கு உணர்த்த எண்ணினார் . அந்தணர் போல வேடம் பொருத்தி இயற்பகையாரின் இல்லத்துக்கு சென்றார் . இயற்பகையார் அடியாரை வணங்கி வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தார் . மனைவி நீர் கொண்டு வந்து அவரின் பாதங்களை தூய நீராட்டினார் . நறுமலர் தூவினார் அன்பர்க்கு அன்பரே ! இந்த ஏழையின் குடிசைக்கு தாங்கள்

இன்று எழுந்தருளியிருப்பது அடியேன் செய்த பேறு தான் என்று பணிவோடு பகர்ந்தார் இயற்பகையார்.

உன்னுடைய பக்தியை கண்டு நான் மகிழ்ந்தேன் என்றும் , என்னைப் போன்ற சிவனடியார்கள் யாசிப்பது இல்லை ஆனாலும் . அள்ளிக் கொடுக்கும் பண்பினையுடையவர் நீர் என்று கேள்விப்பட்டோம். நான் விரும்பும் ஒன்றை உம்மிடமிருந்து பெற்றுப் போகலாம் என்று தான் வந்தேன் என்று கூறினார் . இந்த அடிமையின் கடமை அதுதானே இந்த ஏழை ஐயன் எதைக் கேட்பினும் மறுக்காமல் கொடுப்பேன் என்பது உறுதி என்று கூறினார் . அடியாராக வந்த முக்கண்ணன் முகம்மலர புன்னகை புரிந்தார் . இயற்பகையாரை ஒருமுறை பார்த்துவிட்டு அவர் அருகே நின்ற அவரது மனைவியாரையும் நோக்கி பின்னர் இயற்பகையாரிடம் கேட்டால் மறுக்க மாட்டீரே? என்று திருமபவும் கேட்டார்.

அணுகளவிற்கும் ஐயம் வேண்டாம் ஐயனே ! ஆணையிடுங்கள் நான் செய்து முடிக்கிறேன் என்றார்.

உடனே முக்கண்ணனும் நீர் சொன்னசொல் தவறாதவர் என்று பலபேர் கூற கேட்டிருக்கிறேன் ,என்று கூறி உம்முடைய மனைவியை அழைத்துப் போகவே நான் இங்கு வந்தேன் என்று கூறினார்.

அவ்வார்த்தையை கேட்ட இயற்பகையார் சற்றும் திகைப்படையவில்லை மறுத்து ஒரு வார்த்தை கூட கூறவில்லை . அதற்கு மாறாக முன்பை விட மகிழ்ச்சியாக இருந்தார் . தன்னுடைய

கரம் உயர்த்தி அவரை வணங்கி ஐயனே ! என்னிடம் உள்ள பொருளை கேட்டீர்கள் உண்மையிலேயே தங்கள் அருளுக்கும் ஆசிக்கும் இந்த எளியேன் அடிமை என்றார் இயற்பகையார் . இயற்பகையாரின் மனைவியார் கணவரின் விருப்பப்படி அம்மையப்பரின் திருவடியை வணங்கி நின்றாள். அடுத்ததாக நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார் இயற்பகையார் மாறுவேடத்திலிருந்த சிவபெருமானும் உனது மனைவியை அழைத்துச் செல்வதால் உன் சுற்றத்தார் என் மீது வெறுப்பு கொள்ளலாம்.

அதனால் இந்த மங்கையோடு இவ்வூர் எல்லையை கடப்பது வரை என்னுடன் துணையாக வரவேண்டும்என கேட்டார் பெருமான் . அப்படியே ஆகட்டும் பெரியவரே ! இப்பணி எனக்கு கிடைத்தது மிகச் சிறப்பானது என்று கூறி விடை பகர்ந்தார் . வேகமாக உள்ளே சென்ற இயற்பகையார் போர்க்கோலம் பூண் ;டு வாளும் , கேடயமும் ஏந்தி வெளியே வந்தவர் , மாதொரு பாகனையும் தமது மனைவியையும் முன்னே போகச் செய்து அவர்களுக்கு தக்க துணையாகப் பின்னே வீர நடை போட்டுப் புறப்பட்டார்.

இவரதுஇச்செய்தியை கேட்டு ஊரார் வெகுண்டனர் வில் , வாள், வேல், சரிகை முதலிய படைக்கருவிகளைத் தூக்கிக் கொண்டு ஆர்த்து எழுந்தனர். வணிக குலத்திற்கே மாசு கற்பித்து விட்டாரே இயற்பகையார் என்று பொருமினர் , தூற்றினர் ஊர் பெரியவர்கள் அஞ்சவில்லை இயற்பகையார் வெஞ்சினம் கூறினார் . அவர்கள்

கொதித்து எழுந்தனர் . இவர்களிடையே போர் மூண்டது . இயற்பகையாரின் வீரம் விளையாடியது எதிரிகளின் பலம் சிதறியது சிதைந்தது திசைக் கொருவராய் ஓடி ஒளிந்தனர் இயற்பகையார் அனைவரையும் வென்றார் அவர் அடியாராகிய இறைவனை வணங்கி அஞ்சாமல் முன்போல் அடி எடுத்து வைப்பீர்களாக என்று கேட்டுக்கொண்டார்.

பிறகு மூவரும் அவ்வூரின் எல்லையில் அமைந்துள்ள 'சாய்க்காட்'எனும் இடத்தை எந்தவித ஆபத்தும் இல்லாமல் அடைந்தனர். அவ்விடத்திற்கு வந்ததும் யோகியார் இனி நீ திரும்பலாம் என்று கட்டளையிட்டார் வணிக குலமகனும் யோகியாரின் மலரடிகளில் வீழ்ந்து வணங்கி அருள் பெற்று வந்த வழியே திரும்பினார்.

செய்தற்கரிய அரும் பெரும் தியாகத்தை செய்து திரும்பும் தொண்டரது செவிகளில் விழுமாறு இயற்பகையாரே ! ஓலம்! மீண்டும் நீ திரும்ப வருவாய் ஓலம் ஓலம் என்று யோகியார் கூவி அழைத்தார் அடியாரின் ஓலக்குரலை கேட்டு இயற்பகையார் இதோ வந்துவிட்டேன் மீண்டும் உங்களை துன்புறுத்த வருவோரை இவ்வாளால் தடுப்பேன் என்று உரக்கக் கூறியபடியே சிவனார் குரல் கொடுத்த திசைநோக்கி விரைந்தார். அப்பொழுது வேதியர் வடிவில் இருந்த மறையவர் மறைந்தார். தனது மனைவி மட்டும் நிற்பதை கண்டார். இயற்பகையார் யோகியாரை காணாமல் திகைத்தார்.

அப்பொழுது வானத்து வீதியிலே ஞானத்து வேத முதல்வோன் உமையாளுடன் விடையின் மேல் அற்புதமான அருட்பெருஞ்சோதியாகத் திருத்தொண்டருக்கு காட்சி கொடுத்தார்.

கண்டதும் சிவத் தொண்டர் நிலத்தில் வீழ்ந்தார் எழுந்தார் . கரம் குவித்து சிரம் தாழ்த்து வணங்கினார் . அவர் தம் அருங்குண மனைவியாரும் கணவரோடு சேர்ந்து வணங்கினாள் . எம்பெருமான் அவர்களை நோக்கி, அன்பரே உன் எல்லையற்ற அன்பின் திறத்தைக் கண்டு யான் மகிழ்ந்தோம். உலகமே வியக்கும் வண்ணம் பரமனிடம் பெரும் பக்தி கொண்ட தொண்டனே! நீயும் உன் கற்புடைச் செல்வியும் பூவுலகில் பன்னெடுங்காலம் வாழ்ந்து பின்னர் நம்பால வந்து அணைவீர்களாக என்று திருவாய் மலர்ந்து அருளி மறைந்தார் . இயற்பகையார் மனைவியுடன் இல்லத்திற்கு திரும்பினார் . எம்பெருமானின் அற்புத திருவிளையாடலைப் பற்றி உணர்ந்த ஊர்மக்கள் இயற்பகையாரின் பக்திக்கு அடிபணிந்தார்கள்

இயற்பகையார் எல்லோராலும் தொழுதற்குரிய மகான் ஆவார் . இயற்பகையார் மனைவியுடன் பல்லாண்டு காலம் இன்புற்று வாழ்ந்தார்.

சைவ நெறியின் வாயிலாக அன்புநெறி சமூக வாழ்வியலுக்கு யதார்த்தம் அளிக்கின்ற நிலையை அறிந்து கொள்ள முடிகின்றது . இயற்பகையார் இறைவன் மீது கொண்ட அன்புநெறியால் நாயன்மார்களுள் ஒருவராக புகழடைந்த நிலையை அறியமுடிகின்றது.

**அரிவாட்டாய நாயனாரின் பக்திநெறி**

சோழநாட்டில் உள்ள கணமங்கலம் என்ற ஊரில் வாழ்ந்த சிவபக்தராகியஅரிவாட்டநாயனார் நாயனார் செல்வச் சிறப்பு மிக்கவர் , தினந்தோறும் செந்நெல்லால் சமைத்த உணவையும், செங்கீரையையும் மாவடுவையும் நிவேதனமாக படைத்து வழிபடுவது அவர் வழக்கம் இவரை சோதிக்க எண்ணிய சிவபெருமான் இவருக்கு வறுமை உண்டாகும் படிச்செய்தார்.

செல்வவளம் குன்றியதால் நாயனார் , கூலிக்குநெல் அறுக்கும் தொழிலாளி ஆனார் . அப்படி கூலியாக கிடைத்த நெல்லை விற்று செந்நெல் வாங்கி அமுது படைத்து வழிபட்டு வந்தார்.

செந்நெல் சிவனுக்கு மட்டுமே உரித்தானது எனக்கருதி கார் நெல்லைத் தானும் தன் மனைவியும் உண்டு வாழ்க்கை நடத்தி வந்தார், மேலும் சோதிக்க எண்ணிய சிவபெருமான் அவ்வூர் வயல்களிலிருக்கும் நெல் எல்லாம் செந்நெல்லாகும் படிச்செய்தார். அதனைக்கண்டு மகிழ்ந்த நாயனார் , செந்நெல் அரிந்த அதற்கான கூலியையும் செந்நெல்லாகவே பெற்று அதனைக் கொண்டு சிவனுக்கு திருவமுது படைத்து வழிபட்டார். செந்நெல் சிவனுக்கு மட்டுமே என்று கருதியதாலும் உண்பதற்கு கார் நெல் கிடைக்காததாலும் நாயனாரின் மனைவி கொல்லையில் விளைந்த கீரை வகைகளைச் சமைத்து கணவனுக்கு அளித்து தானும் உண்டுவந்தார் . நாளடைவில் இந்த கீரைகளும் காணாமல் போயின . மனம் சலியாத நாயனார் வெறும்

நீரை மட்டுமே அருந்தி கூலிவேலை செய்து திருவமுது பணியைத் தொடர்ந்தார்.

ஒரு நாள் நாயனார் திருவமுதுக் கலயத்துடன் கோயில் நோக்கி சென்று கொண்டிருந்தார் அவர் வெறும் நீரை மட்டுமே அருந்தி வாழ்ந்து வந்ததால் உடல் சோர்வுற்று கீழே விழுந்தார் . கலயம் கீழே விழுந்து உணவுப் பொருட்கள் சிதறின அமுது படைக்கும் பணி தடைப் பட்டதை எண்ணி கலங்கினார் நாயனார் "இறைவன் எனது உணவை ஏற்கவில்லை இனிவாழ்ந்து என்ன பயன் என்று கருதியவர் தான் வைத்திருக்கும் நெல் அறுக்கும் அரிவாளால் தம்முடைய கழுத்தைத் தானே அரிந்துக்கொள்ளத் தொடங்கினார்.

உடனே சிவபெருமானின் கை நிலத்தில் தோன்றியது நாயனாரின் கையை இறுகப்பற்றியது கூடவே மாவடுவை உண்பதற்காக பல்லினால் கடிக்கும் ஓசையும் எழுந்தது.

கை தடுத்தால் நாயனார் தன் செயலை நிறுத்தினார் உடனே , அவரது கழுத்தின் காயம் மறைந்து போனது உடலின் தளர்ச்சியும் நீங்கியது. 'சிவலீலையை உணர்ந்த நாயனார் தனது இருகைகளையும் கூப்பி சிவனைப் பலவாறாக போற்றி துதித்து வணங்கினார்.

உடனே சிவபெருமான் வானில் இடபாரூடராய்த் தோன்றி நீ நம்மேல் வைத்த அன்பினாலே செய்த செய்கை மிகவும் நன்று நீ உன் மனைவியோடு வந்து நமது சிவலோகத்தில் வாழ்வாயாக ! என்று சொல்லி ஆசீர்வதித்து மறைந்தார்.

உலகில் யாரும் செய்வதற்கு அரிதான அரிவாளால் தமது கழுத்தை தானே அரிந்துக் கொள்ளும் செயலைச் செய்ததால் நாயனார் அது முதல் அரிவாள் தாய நாயனார் என்னும் பொருளில் அரிவாட்டாய நாயனார் என்று அழைக்கப்பட்டார் . மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து சிவப் பணிகள் புரிந்து இறுதியில் சிவனின் திருவடியை அடைந்தார்.

இறைவனை அடைந்து வீடுபேறு பெறுவதற்கு பக்திநெறி காரணமாக அமையும் என்பதனை விளக்குகின்றது.

அடியார்க்கு தொண்டு புரிந்த இளையான்குடி மாறனார்

வேளாளர் மரபில் தோன்றியவர் மாறனார் இளையான் குடியில் பிறந்த காரணத்தால் இளையாங்குடி மாறனார் என்று அழைக்கப்பெற்றார். இவர் நிரம்ப வயல் வளம் உடையவராய் விளங்கினார். எந்நேரமும் சிவபெருமானின் நமச்சிவாய மந்திரத்தையே நினைத்துக் கொண்டிருப்பார் . இளையாங்குடி மாறனார் . மாறனாரும், அவர் மனைவியாரும் வள்ளுவர் கூறும் விருந்தோம்பல் அறத்தை நன்கு உணர்ந்து வாழ்ந்து வந்தனர் . அடியார் தம் வீடு நோக்கி வரும் அன்பர்களை இன்முகங்காட்டி இன்சொல் பேசி வரவேற்பார்.

அடியார்களைக் கோலமிட்ட பலகையில் அமரச் செய்து பாதபூஜை செய்து வணங்குவார் அடியார்களுக்கு அறுசுவை அமுதூட்டிஉளம் மகிழ்வதையே தங்களது வாழ்க்கை பணியாகக் கொண்டிருந்தனர்.

இவர்கள் இல்லத்தில் இலக்குமி தேவி நிரந்தரமாய்க் குடியிருந்தாள். மாறனாரின் உயர்ந்த தன்மையை உலகறியச் செய்ய எண்ணினார் சிவனார் . வளம் செழிக்கும் காலம் மட்டுமல்லாது வறுமைகாலத்தும் அடியாரைப் போற்றி பேணுபவர் என்பதை உலகிற்கு உணர்த்துவதற்காக, அவ்வள்ளலார்க்கு வறுமையை உருவாக்கினார் . சிவனார்

வறுமையைக் கண்டு நாயனார் சற்றும் மனம் தளரவில்லை எப்பொழுதும் போல அவர் தமது சிவத்தொண்டை தட்டாமல் செய்து வந்தார். வீட்டிலுள்ள பொருள்களை விற்றாவது அடியார்க்கு அமுதுண்ணும் பணியை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். செல்வம் தான் சுருங்கிக் கொண்டே வந்தது தவிர அவரது உள்ளம் மட்டும் சுருங்காமல் நிறைவு பெற்றிருந்தது.

விற்று விற்று கைப் பொருள்கள் அனைத்தும் தீர்ந்ததும் மாறனார் கையிலிருந்து பணத்திற்கு சிறிதளவு நிலத்தை குத்தகைக்கு வாங்கினார். சிறிதளவு விதை நெல்லை விதைத்தார் . அன்றிரவு பயங்கர மழை காற்றோடு கலந்து பெய்யத் தொடங்கியது . பாதை எங்கும் மழைநீர் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடத்தொடங்கியது மாறனாருக்கு ஒன்றுமே புரியவில்லை விதைநெல் வீணாகிவிடுமே என்று வேதனைப்பட்டார் . மாறனாரும் அவர் மனைவியாரும் பசியாலும், குளிராலும் வாடினர் . இரவெல்லாம் உறக்கமின்றி விழித்திருந்தனர். இவ்வேளையில் சிவபெருமான் சிவனடியார் போல்

திருக்கோலம் கொண்டார் மழையில் சொட்ட சொட்ட நனைந்த வண்ணம் மாறனார் வீட்டிற்குள் வந்து நுழைந்தார்.

மாறனாரின் வீடு இரவு , பகல் என்று எந்த நேரத்திலும் அடியவர்களுக்காக திறந்தே இருக்கும் மழையில் நனைந்து வந்த அடியாரைப் பார்த்து துடிதுடித்து போன மாறனார் விரைந்து சென்று அடியவரை வரவேற்று அவரது பொன்மேனியில் வழிந்து விழும் ஈரத்தை துவட்டச் செய்து ஆசனத்தில் அமரச்செய்தார்.

மாறனார் அவரிடம் சுவாமி ! சற்றுப் பொறுங்கள் அமுது சூடாகச் செய்து அளிக்கிறேன் என்றார். பகவானும் அதற்கு சம்மதித்தவர் போல தலையை அசைத்தார். இந்த நிலையிலும் தனக்கு இப்படி ஒரு நிலை வந்துவிட்டதே என்று எண்ணிகவலைப் படவில்லை அவர் மனமும் தளரவில்லை எந்தவித வெறுப்பும் கொள்ளவில்லை வீடு தேடி வந்த அடியாரின் பசியை எப்படி போக்குவது என்பதை பற்றியே எண்ணினார் மனைவியிடம் அது குறித்து கேட்ட பொழுது அவரோ சுவாமி ! இந்த நள்ளிரவு வேளையில் எங்கு சென்று எவரிடம் நான் என்ன கேட்பேன் கேட்டால் தான் கொடுக்க யார் இருக்கிறார்கள் . இவ்வாறு கூறி கண்கலங்கினாள் மனைவி செய்வதறியாது இருவரும் திகைத்தனர் வெளியே இடியும், மழையும் அதிகரித்தது.

அப்பொழுது மின்னல் பளிச்சிட்டது அந்த மின்னலைப் போல மனைவியார் உள்ளத்திலும் ஓர் எண்ணம் பளிச்சிட்டது அவர் மாறனை நோக்கி சுவாமி எனக்கு ஒரு அரியயோசனை தோன்றுகிறது கழனியில்

காலையில் விதைத்த முளைநெல்லை வாரிக் கொண்டு வாருங்கள் நொடி பொழுதில் குத்தி அரிசியாக்கி அடியார்க்கு அமுதிடலாம் என்றாள் தக்க தருணத்தில் துணைவியாரது மொழிகள் அவரது செவியில் அமுதம் போல பாய்ந்து உள்ளமும் உடலும் பூரித்து போனர் மாறனார்.

பொன் புதையல் கிடைத்ததைப் போல் கூடையும் கையுமாக கழனியை நோக்கி விரைந்தார் . திக்கு திசை தெரியாத கும்மிருட்டு , மேடும் பள்ளமும் காண முடியாத அளவிற்கு தெருவெல்லாம் வெள்ளகக்காடு, இத்தகைய பயங்கர சூழ்நிலையில் அடியார் மீது பூண்டுள்ள அன்பின் பெருக்கால் நாயனார் இடிக்கும் மழைக்கும் அஞ்சாமல் கழனியை நோக்கி ஓடினார்.

நடந்து பழக்கப்பட்ட பாதையானதால் இருளில் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டார் மனம் குளிர சிவநாமத்தை ஜபித்தார். மிக்கசிரமத்துடன் தண்ணீர் மீது மிதக்கின்ற விதைநெல் முளைகளை வாரிக் கூடையிலே போட்டுக் கொண்டு வீட்டை அடைந்தார்.

அதற்குள் மனைவியார் தோட்டத்திலிருந்து கீரை பறித்து வந்தாள் விதை நெல்லை மகழ்வுடன் வாங்கி கொண்ட அம்மையார் உணவு சமைக்க விறகு இல்லையே என்று யோசித்து நிற்பதை கண்ட மாறனார் தன்னுடைய வீட்டைத் தாங்கி நிற்கும் தாங்கு கட்டைகள் கண்ணில் பட்டது. உடனே அவற்றை உருவித் தந்தார் மாறனார்.

மழையில் நனைந்து வந்திருக்கும் அடியாருக்கு சூடாக உணவு படைக்க வேண்டும் என்ற எண்ணமே அவர் மனம் முழுவதும் நிறைந்திருந்தது.

மனைவியாரும் இன்முகத்தோடு நெல்லை வறுத்து குத்தி அரிசியாக்கி சோறு சமைத்தார் கீரையைப் பயன்படுத்தி கறியமுது படைத்தார்.

பின்னர் மாறனாரும் மனைவியாரும் சிவனடியாரை திருவமுது உண்பதற்காக எழுப்பினர் .தனது சோதனையில் மாறனார் வெற்றி பெற்றதால் மகிழ்ந்த சிவபெருமான் உமையம்மையுடன் இடபவாகனத்தில் விண்ணில் பேரொளி வெள்ளமாக காட்சி அளித்தார்.

அதனைக் கண்டதும் இளையான்குடி மாறநாயனார் மற்றும் மனைவியார் தரையில் வீழ்ந்து வணங்கினர்.

“மாறனாரே, வறுமையிலும் செம்மையாய் அடியவர்களுக்கு அமுதூட்டிய அன்பரே நீர் மீண்டும் செல்வ செழிப்போடு வாழ்ந்து நீண்ட காலம் அடியவர்களுக்கு திருவமுது படைத்து இறுதியல் எம்மை வந்து சேர்வீர்களாக”என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மாறனாரும் மனைவியாரும் நெடுங்காலம் மகேசுவர பூசையைத் தொடர்ந்து இறுதியில் சிவபாதத்தை அடைத்து இன்புற்றிருந்தனர்.

**முடிவுரை**

தன் உடலிலே சரிபாகமாய் தேவியையும் சடையிலே சந்திரனையும் கங்கையையும் கொண்டு நாகத்தை ஆபரணமாகவும்

இந்த உலகையே தனக்குள் அடக்கி இருப்பவனாகிய சிவபெருமான் அன்பு என்னும் கட்டுக்குள் அடங்கி விடுவதனை சைவ இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ளமுடிகின்றது.

சைவ நெறியின் வாயிலாக அன்பு நெறிப்படி நடைமுறை வாழ்க்கையில் செயல்பட்டால் பக்திநெறி வாயிலாக வீடுபேறு நிலையை அடையமுடியம் என்ற கருத்தை சைவம் எடுத்துரைக்கப்படுகின்றது.

**பார்வை நூல்கள்**

1.சைவ சமயம், டாக்டர் கோ.சுந்தரமூர்த்தி

சர்வோதய இலக்கியப் பண்ணை

32/1 மேல வெளி வீதி மதுரை - 625001

முதற்பதிப்பு - ஜீலை 1977

2.நெஞ்சுவிடு தூது

டாக்டர் உ.வே.சா நூல்நிலையம்

3. அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசண்ட் நகர், சென்னை - 600090

2009 அச்சும் கட்டும்

இராஜேஸ்வரி கன்வர்ஷன்ஸ்

29.்.15 சுபேதார் ஹீசேன் தெரு

இராயப்பேட்டை, சென்னை - 600014.